பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 14 (29—7—72) சனி — வெளியூர்: ஆடி 15 (30—7—72) ஞாயிறு [இதழ்: 39

புதிய உள்நாட்டு அஞ்சல் உறை

புதுடில்லி, ஜூலை 29—
இத்திங்கள் 31-ம் நாள்முதல் புதிய உள்நாட்டுக் கவர்களை (இன்லாண்டு லெட்டர்) மத்திய அரசு வெளியிடுகிறது.

15 காசு விலையுள்ள இந்த உள்நாட்டு கவர்களில் இரண்டு மொழிகளில் குறிப்பு எழுதப் பட்டிருக்கும்; நீல நிறத்தில் இந்தக் கவர்கள் அச்சிடப்பட்டிருக்கும்.

முதலில், பம்பாய் — சென்னை

(4-ம் பக்கம் பார்க்க)

'கழகப் பொருளாளர் புரட்சி நடிகருக்கு வழங்கும் பாராட்டு பாசத்தின் — நேசத்தின் எதிரொலி;

குடும்பத்திலுள்ளவர்கள் அனைவரும் கூடி வாழ்த்தும் விழா' — தலைமைக் கழகப் பாராட்டு விழாவில்

கழகத் தலைவர் கலைஞர் — கழகப் பொதுச்செயலாளர் நாவலர் — கழக முன்னணியினர் புகழாரம்

'எதிர் நீச்சலில் வளர்ந்தது தி.மு.க.'

'கிடைக்கும் பெருமையை எதிர்ப்புக்கிடையில்தான் பெறும் நிலையில் இருக்கிறேன்'

'கலைத்துறை மூலம் கருத்துக்கு வலுவூட்டிக் கொள்கைகளைப் பரப்பும் புரட்சி நடிகரைத் தமிழகமே வாழ்த்துகிறது'

சென்னை, ஜூலை 29—

இந்திய அரசினரால் 'பாரத்' பட்டம் பெற்ற கழகப் பொருளாளர் — புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கட்கு தி.மு.க. தலைமை நிலையத்தின் சார்பில் நேற்று பாராட்டு விழா நடைபெற்றது! கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமை தாங்கினார்.

சென்னை அபீபுல்லா சாலையிலுள்ள எஸ். ஐ. எஸ். அரங்கில் நடைபெற்ற இந்தப் பாராட்டு விழாவில், கழக முன்னணியினரும் — மாவட்டச் செயலாளர்களும் — பொதுக்குழு, செயற்குழு உறுப்பினர்களும் — கழக நாடாளுமன்ற, மேலவை உறுப்பினர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களைப் பாராட்டி சென்னை மாவட்டச் செயலாளர் நீலநாராயணன், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ். மணி, வட ஆற்காடு மாவட்டச் செயலாளர் தோப்பூர் திருவேங்கடம், தென் ஆற்காடு மாவட்டச் செயலாளர் செல்வராஜ், தஞ்சை மாவட்டத் துணைச் செயலாளர் இராசன், சேலம் மாவட்டப் பொருளாளர் நடேசன், முகவை மாவட்டச் செயலாளர் எஸ். எஸ். தென்னரசு, கோவை மாவட்டச் செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம், மதுரை மாவட்டச் செயலாளரும் — மதுரை மேயருமான எஸ். முத்து, திருச்சி மாவட்ட முன்னாள் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் ஆகியோர் பேசினர்.

மாவட்டச் செயலாளர்கள் சார்பில் பொன்னாடைகளும் — மலர்மாலைகளும் புரட்சி நடிகருக்கு அணிவிக்கப்பெற்றன; அன்பில் தர்மலிங்கம், 'ஹெர்குலஸ் சிலை' ஒன்றினைப் பரிசளித்தார்.

தலைமைக் கழகத்தின் சார்பில் வெள்ளியால் செய்யப்பட்ட கேடயம் ஒன்றும், சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் கேடயம் ஒன்றும் பரிசளிக்கப்பட்டன.

கழகப் பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் உரையாற்றிய பின், கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் புரட்சி நடிகரைப் பாராட்டி உரையாற்றினார்.

புரட்சி நடிகர் நன்றி தெரிவித்து உரையாற்றுவதற்குமுன், கழகத் தோழர்கள் பலரும் புரட்சி நடிகருக்கு மாலைகளும் — பாராட்டும் — பரிசுகளும் வழங்கினர்.

கழகத் தலைவர் டாக்டர் கலைஞர்

பாராட்டு விழாவுக்குத் தலைமை யேற்று கழகத் தலைவரும் — முதலமைச்சருமான கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்த விழா, நம்முடைய குடும்ப விழா; நம் குடும்பம் பரந்து விரிந்து கிடக்கின்ற ஒரு பெரியக் கம்; இந்த இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர் கழகப் பொருளாளர் — புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். அவர்களாவார்.

அவருக்கு, 'இந்தியத் திருநாட்டின் தலைசிறந்த நடிகர்' என்ற விருது வழங்கப்பட்ட நேரத்தில், பலர் மகிழ்ந்தார்கள்; சில பேர் எதிர்ப்புக் குரல் கொடுத்தார்கள்.

இதுபோன்ற விருதுகள் பல பேருக்கு நாட்டிலே வழங்கப்பட்டிருக்கின்றன; அவர்களையெல்லாம் வாழ்த்துவதைத் தி. மு. கழகத்தின் மரபாக — அரசியல் நாகரிகமாகக் கடைபிடித்து வருகிறோம்.

கழகத்தைச் சேர்ந்த நம்மில் யாருக்காவது அப்படிப்பட்ட பெருமைகள் கிடைத்திருக்குமானால், அவற்றையெல்லாம் நாம் எதிர்ப்புக்கிடையேதான் பெற வேண்டியவர்களாக இருந்திருக்கிறோம்; அதிலே ஒரு தனி மகிழ்ச்சி உண்டு.

ஏனென்றால், இந்த இயக்கமே எதிர் நீச்சலுக்கிடையேதான் வளர்ந்தது; எதிர்ப்பில்லாமல் செல்கின்ற நேரத்தில் ஏற்படுகின்ற கவர்ச்சியைவிட, எதிர்ப்புக்கிடையே செல்கின்ற நேரத்தில் ஏற்படுகின்ற கவர்ச்சி அதிகம்.

நீல வானில் மேகங்களே இல்லாமல் இருக்கும்போது — நிலவைக் காணும்போது அவ்வளவு அழகாக இருக்காது; நிலவிற்கு அருகில் இரண்டொரு மேகத் திட்டுக்கள் தெரிந்து — அவை நிலவை மறைப்பதும், விலகுவதுமாக இருக்கின்ற அந்தக் காட்சியைக் காணுகின்ற நேரத்தில் உள்ளபடியே அழகாகத்தான் இருக்கும்.

வீணை தனியாக வைக்கப்பட்டிருந்தால் அப்படியேதான் இருக்கும்; ஆனால், அதிலே கைவிரலால் தட்டி — எதிர்ப்பைக் கிளப்பினால் தான் நாதம் கிளம்புகிறது!

அதைப்போலத்தான், தட்டிவிடுகின்ற வீணையாக ஆகி — நல்ல நாதத்தைக் கழகம் உலகிற்கு வழங்கிக் கொண்டிருக்கிறது!

அப்படிப்பட்ட நாதத்தை வழங்குகின்ற நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் — புரட்சி நடிகர் அவர்களுக்கு 'பாரத்' என்ற பட்டத்தை இந்தியத் திருநாடு வழங்கி, அவரையும் — கலை உலகத்தையும் — நம்மையும் — தமிழ்நாட்டையும் கௌரவித்துத் தன்னையும் கௌரவித்துக் கொண்டது; இதுதான் உண்மை!

இந்தியத் திருநாடு, புரட்சி நடிகருக்கு 'பாரத்' பட்டம் அளித்து சிறப்பித்தது மாத்திரமல்ல — அண்மையில் அவர் சிங்கப்பூருக்குச் சென்றிருந்தபோது — பினாங்கு அரசின் சார்பில் — 'கலைவேந்தன்' என்ற பட்டமும் அளிக்கப்பட்டது. அதற்கும் சேர்த்து இந்த விழா நடத்துகிறோம் என்றால், அது மிகமிகப் பொருத்தமுடையதாகும்.

இந்த விழாவை எப்படியாவது நடத்தித் தீரவேண்டுமே என்பதற்காக நடத்தப்படுகின்ற விழா வல்ல — மரபுக்காக நடத்தப்படுகின்ற விழாவல்ல; இந்த விழா, பாசத்தின் எதிரொலி! நமக்கும் எம். ஜி. ஆர். அவர்களுக்கும் இருக்கின்ற நேசத்தின் எதிரொலி! குடும்பத்தில் இருக்கின்ற ஒரு மகனை — குடும்பத்தினர் அனைவரும்கூடி வாழ்த்துகின்ற விழா!

நம் வாழ்த்துக்களைப் பெறுகின்ற அதே நேரத்தில், புரட்சி நடிகர் தமிழக மக்கள் அனைவருடைய வாழ்த்துக்களையும் பெறுகின்றார்!

(4-ம் பக்கம் பார்க்க)

நிலத்துக்கு உச்சவரம்பு

ஐதராபாத், ஜூலை 29—
வேளாண்மை நிலத்துக்கு உச்சவரம்பு ஏற்படுத்தும் புதிய மசோதா ஒன்று ஆந்திரச் சட்டமன்றத்தில் கொண்டு வரப்படவிருக்கிறது.

இதன்படி, ஒரு குடும்பத்துக்கு இரு போக நஞ்சை நிலம் 18 ஏக்கர் என்றும், ஒரு போக நிலம் 27 ஏக்கர் என்றும், புஞ்சை நிலம் 54 ஏக்கர் என்றும் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

இம்மசோதாவை நேற்று அமைச்சரவை கூடி விவாதித்தது.

ஒரிசாவில் சட்டம்-ஒழுங்கு படும் பாடு

பல்கலைக்கழகத்துக்குள் இராணுவம் பாதுகாப்பு

பதட்ட நிலை காரணமாக பட்டமளிப்பு விழா இல்லை

புவனேசுவரம், ஜூலை 29—
உத்கல் பல்கலைக் கழகத்தில் பதட்ட நிலை தொடர்ந்து இருந்து வருவதால், பல்கலைக் கழகக் கட்டட வளைவுக்குள் இராணுவப் போலீசாரை நிறுத்த நிர்வாகம் முடிவு செய்திருக்கிறது.

இதுவரை நடைபெற்ற பரீட்சை முடிவுகளும் இன்னமும் வெளியிடப்படவில்லை.

டிசம்பர் — சனவரி மாதத்தில் நடைபெற வேண்டிய பட்டமளிப்பு விழாவும் இதுவரை நடைபெறவில்லை.

விண்வெளியில் விஞ்ஞான செயற்கைக் கோள்

மாஸ்கோ, ஜூலை 29—
'காஸ்மாஸ் 512' என்ற புதிய விஞ்ஞான செயற்கைக் கோளை இரஷ்யா நேற்று விண்வெளியில் செலுத்தியிருக்கிறது.

சிம்லா ஒப்பந்தம் அங்கீகாரம்

குடியரசுத் தலைவர் கையெழுத்திட்டார்

புதுடில்லி, ஜூலை 29—
அண்மையில் சிம்லாவில் நடைபெற்ற உயர்மட்டப் பேச்சின் போது ஏற்பட்ட ஒப்பந்தத்தை அங்கீகரித்து, இந்தியக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி நேற்று கையெழுத்திட்டார்; இது, விரைவில் சுவிட்சர்லாந்து தூதுவரகம் மூலம் பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்படும்.

பாகிஸ்தான் ஏற்கனவே அங்கீகரித்த இந்த ஒப்பந்தம், டெல்லி வந்து சேர்ந்துவிட்டது.

இந்தியா அனுப்பிவைக்கும் ஒப்பந்தம் பாகிஸ்தான் போய்ச் சேர்ந்ததிலிருந்து 30 நாட்களுக்குள் இரு நாடுகளும் பிடித்த பகுதிகளிலிருந்து தத்தம் படைகளைத் திரும்பப் பெறவேண்டும்.

சிம்லா ஒப்பந்தத்தைப் பாகிஸ்தான் சட்டமன்றம் விவாதித்துவிட்டது; அடுத்த திங்களன்று துவங்கும் இந்திய நாடாளுமன்றக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தம் விவாதத்துக்கு வரவிருக்கிறது.

கடந்த டிசம்பர் போரின்போது இந்திய இராணுவம் பாகிஸ்தானின் பஞ்சாப் — சிந்து — கட்ச் பகுதிகளைச் சேர்ந்த 5,139 சதுர மைல் நிலப்பரப்பைக் கைப்பற்றியிருக்கிறது.

பாகிஸ்தான் இராணுவம், 69 சதுர மைல் பரப்பளவுள்ள நிலப் பகுதியைக் கைப்பற்றியிருக்கிறது.

கைப்பற்றப்பட்ட பகுதிகளிலிருந்து இந்த இரு நாடுகளும் தத்தம் படைகளைத் திரும்பப் பெறும்.

அண்ணாவின் எண்ணத்தை ஈடேற்றும் சீரணி

அனைவரும் பாராட்டும் ஐந்தாண்டுச் சாதனைகள்

கருத்தரங்கில் அமைச்சர் என்.வி. நடராசன் விளக்கம்

குற்றாலம், ஜூலை 27 -

" கிராமப்புறங்களில் உள்ள ஆற்றல்களை ஒன்றுதிரட்டி--ஆக்கப் பணிகளில் அவற்றைச் செலுத்தி--உணவுப் பொருட்களைப் பெருக்க வேண்டுமென்பதே தமிழக அரசின் முக்கிய குறிக்கோளாகும்; இதனை நிறைவேற்றும் வகையில், சீரணியினர் கால்வாய்--குளங்களைத் தூர் எடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

" பொது அறிவை வளர்க்க சீரணி அறிவகங்களை நடத்தி அவைகளின் மூலம் சமுதாயத்தில் நிலவிவரும் கேடுகளைக் களையவும் அரசின் சாதனைகளை மக்களுக்கு விளக்கவுமான பணிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

" கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளை அமைப்பதிலும், பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதிலும் சீரணியினர் முனைந்து நிற்கின்றனர்; பொதுநலம் காண துப்புரவுப் பணியும் மேற்கொண்டுள்ளனர்.

" தன்னுடைய சிறந்த பணிகள்மூலம், சீரணி மகத்தான வெற்றியைப் பெற்றுள்ளது; ஐந்தாண்டுச் சீரணியின் சாதனையைப் பார்க்குமிடத்து, எந்த உயரிய நோக்கத்திற்காகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சீரணியை உருவாக்கினாரோ -- அதைத் தொடர்ந்து கலைஞர் செயலாற்றிவருகிறாரோ -- அவற்றை அரசியல் மாச்சரியங்களுக்கு அப்பாற்பட்டுச் சீரணி முழு அளவில் தனது பணியினை நிறைவேற்றிவைத்து -- பொதுமக்கள் மத்தியில் தனக்கென ஒரு நிலையான இடத்தைப் பெற்று -- தன்னிடம் இன்னும் பொதுமக்கள் எதிர்பார்க்கும் வகையில் தன்னை உயர்த்திக்கொண்டிருக்கிறது "

என்று அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள், நெல்லை -- கன்னியாகுமரி மாவட்ட சீரணிக் கருத்தரங்கில் உரையாற்றுகையில் தெளிவுற விளக்கிக் கூறினார்; மேலும் அவர், சீரணியின் சிறப்புமிக்க பணிகள்பற்றிக் குறிப்பிடுகையில் கூறியதாவது :--

சீரிய குறிக்கோள்

" மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட சீரணி 5 ஆண்டுகள் நிறைவெய்திருக்கிறது.

மக்களிடையே புதியதோர் சமுதாய விழிப்பு உணர்ச்சியை உருவாக்கித் தன்னலம் கருதாத் தொண்டு உணர்ச்சியைத் தூண்டவேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் உருவாக்கப் பட்டதுதான் சீரணி இயக்கம்.

தனக்கென ஊதியம் எதுவுமின்றித் தொண்டு உள்ளத்துடன் ஆற்றலுடைத்த ஆண்களும் -- பெண்களும் ஓய்வு நேரத்தில் பிறர்க்கென பணி செய்வதே இதன் குறிக்கோள் ஆகும்.

வளர்ச்சித் திட்டப் பணிகள் அனைத்திலும் சீரணி இயக்கம் அதன் உழைப்பைத் தந்து வலுவிலும் பெரிதாக வளர்ந்துள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் சாதனைகள் மூலம் சீரணி பொதுமக்களின் கவனத்தையும் -- மத்திய அரசின் கவனத்தையும் கவர்ந்துள்ளது என்றால் மிகையாகாது; இதன் பணிகளைக் கண்ணுற்ற பெரியோர்கள் பாராட்டாமல் இருந்ததில்லை.

மத்திய அரசையும் கவர்ந்த திட்டம்

மேலும் மத்திய அரசு, உயர்மட்ட அதிகாரி ஒருவரைச் சீரணித் திட்டம் செயல்படுகின்ற முறையினை அறிந்துவரத் தமிழகத்திற்கு அனுப்பிவைத்தது; பால் சவுத்ரி என்பவர் தமிழகத்திற்கு வந்து சீரணியின் சாதனைகளைப் பார்வையிட்டு -- தொடர்புள்ள அதிகாரிகளுடன் கலந்து பேசிய பின், 'இத்திட்டத்தை மற்ற மாநிலங்களுக்கும் செயல்படுத்தப் பரிந்துரை செய்கிறேன்' என்று சொல்லி திட்டத்தைப் பற்றிய முழு விவரத்தையும் பெற்று -- அதன்பின் எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பிவைத்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

ஆக்கப் பணிகள்

சென்னை மாநகரில் சீரணித் தொண்டர்கள், பேருந்துப் பயணிகளை வரிசைப்படுத்துவதிலும் -- குடிசைவாழ் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதிலும் -- அரிசிச் சீட்டுக்கள் வழங்குவதிலும் ஈடுபட்டுப் பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றிருக்கிறார்கள்; போலி அட்டைகளைக் கண்டுபிடித்து -- உண்மையான கணக்கினை எடுத்து -- அரசுக்குப் பேருதவி புரிந்திருக்கிறார்கள்.

இந்த நேரத்தில், குமரி மாவட்டத்தில் மடிச்சல் கால்வாய் ஒன்றினைச் சீரணித் தொண்டர்கள் வெட்டிக்கொண்டிருக்கின்ற நல்ல பணியினைக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது; கால்வாய் வெட்டும் இடத்தைத் தானமாகப் பெற்று ரூ. 4 இலட்சம் மதிப்புள்ள அப்பணியை ரூ. 7,000-த்துக்குள் முடிக்கத் திட்டமிட்டு -- பணியும் துரிதமாக நடந்துகொண்டிருப்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பள்ளிகளுக்கு வெள்ளையடிப்பு

மாநில அளவில் -- குறிப்பாகத் துவக்கப் பள்ளிகளில் ஒரு புதிய தோற்றத்தை உருவாக்கும் பொருட்டு எல்லாப் பள்ளிக் கட்டடங்களுக்கும் கோடை விடுமுறை நாட்களில் சீரணித் தொண்டர்கள் வெள்ளையடித்துள்ளனர்.

சீரணித் தொண்டர்கள் மாநகராட்சி ஊழியர்களின் உதவியுடன் ஞாயிற்றுக்கிழமைகளில் சென்னை நகரம் முழுவதும் பொதுமக்கள் பாராட்டக்கூடிய அளவில் 12 வாரங்களில் துப்புரவுப் பணியைச் செய்து முடித்தனர்.

ஊரூரில் பள்ளிக்கூடம்

சென்னை -- அடையாறு ஊரூரில் பத்தே நாட்களில் ரூ 32,000 மதிப்புள்ள பள்ளிக் கட்டடம் ஒன்றைச் சீரணித் தொண்டர்கள் கட்டி முடித்துள்ளனர்.

சென்னை -- வியாசர்பாடியில் 5 பர்லாங்கு தூரமுள்ள ஒரு வடிகால் 21 நாட்களில் தோண்டப்பட்டுள்ளது.

நிலச் சீர்திருத்தப் பணி

குடுமியான்மலையில் உள்ள மாநில வேளாண்மைப் பண்ணையில் நிலச் சீர்திருத்தப் பணியை மேற்கொண்டனர்; அச்சமயத்தில் முற்றிலும் மறைந்துபோன தொரு குளத்தைக் கண்டு புதுப்பித்து -- சுமார் 45 ஏக்கர் நிலம் பாசனமளிப்புக்கு ஏற்பாடு செய்தனர்.

சாலையமைப்புப் பணி

காந்தியடிகளின் நூற்றாண்டுவிழாவினையொட்டி 15—4—69 அன்று தஞ்சை மாவட்டத்தில் கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில், தொண்டர்களும் -- உள்ளூர் மக்களும் சேர்ந்து சுமார் 25 000 பேர் 8 மைல் சாலையை அமைத்தனர்.

திருச்சி -- இராமநாதபுரம் மாவட்டங்களில் லார்பட்டு -- ஒரத்தப்பட்டியை இணைக்கும் 3 மைல நீளமுள்ள சாலையைச் சீரணித் தொண்டர்களும் -- உள்ளூர் மக்களும் ஏறத்தாழ 3 000 பேர் சேர்ந்து ஒரே நாளில் அமைத்துள்ளனர்.

சீரணி அரங்கம்-- உழைப்புக்கு ஓர் எடுத்துக்காட்டு

சென்னை நகரின் பெரிய கடற்கரையில் ஏறத்தாழ ரூ. 40,000 மதிப்பீட்டில் பொது மேடை (சீரணி அரங்கம்) ஒன்றை எல்லா அரசியல் கட்சியினரும் பயன்படுத்தும் அளவில் சீரணித் தொண்டர்கள் கட்டி முடித்துள்ளனர்; சீரணித் தொண்டர்கள் இதை மிக ஆர்வத்தோடு கட்டி முடித்ததோடல்லாமல், 'உழைப்பின் உயர்வை உணர்த்த எடுத்துக்காட்டாகவும் இம்மேடை விளங்குகிறது.

ஏழைகளுக்குக் குடியிருப்பு அமைப்பு

ஏழை மக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் பொருட்டு சென்னை நகரில் -- சைதாப்பேட்டையில் 170 வீடுகள் கொண்ட குடியிருப்புப் பகுதி ஒன்றைக் கட்டி முடித்துள்ளனர்.

நீர்ப்பாசனக் கால்வாய்

கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு ஊராட்சி ஒன்றியத்தில் சீரணித் தொண்டர்கள் கிராம மக்களின் ஒத்துழைப்போடு 6 பர்லாங் நீளமுள்ள நீர்ப்பாசனக் கால்வாய் ஒன்றைத் தோண்டும் பணியில் சுறுசுறுப்போடு ஈடுபட்டுள்ளனர்; ஏறத்தாழ ரூ. 1.50 இலட்சம் மதிப்பிடக்கூடிய தனியார் நிலங்களை நிலச் சொந்தக்காரர்கள் நன்கொடையாக இத்திட்டத்திற்கு அளித்துள்ளனர்.

கடற்கரையை அழகுபடுத்தினர்

அயல்நாட்டவர்கள் கண்டுகளிக்கக்கூடிய சென்னை—எலியட்ஸ் கடற்கரை முட்புதர்களால் சூழப்பட்டிருந்தது; முதலமைச்சர் கலைஞர் அவர்களின் அறிவுரையின்மீது சீரணித் தொண்டர்கள் முட்புதர்களை அகற்றும் கடினமான பணியை மேற்கொண்டு -- 7 நாட்களில் கடற்கரையின் அழகுக்கு அழகு சேர்த்தனர்.

நிழற் குடை கட்டினர்

முதலமைச்சர் கலைஞரின் 48-வது பிறந்த நாளையொட்டி, சென்னை நகரின் முக்கியமான இடங்களில் சீரணித் தொண்டர்களின் சேவையின் மூலமும் -- பொதுமக்களின் நன்கொடை மூலமும் 48 பஸ் நிலையங்களில் சீரணி நிழற் குடைகளைக் கட்டி முடித்துள்ளனர்.

கணக்கெடுப்புப் பணியிலும் ஈடுபட்டனர்

560 சீரணித் தொண்டர்களால் 280 நிலையங்கள் மூலமாகக் குடிசைப் பகுதிகளில் வாழும் 3 வயதுக்குட்பட்ட -- ஏறத்தாழ 72,000 குழந்தைகட்குச் சத்துணவு (ரொட்டி) வழங்கப்படுகிறது; உணவுப் பொருள் வழங்கு துறையினரின் வேண்டுகோளுக்கிணங்க, சர்க்கரைச் சீட்டுக்கள் கணக்கெடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சென்னை நகரில் மாத வருமானம் ரூ 300-க்கு மேலுள்ள குடும்பங்களைக் கணக்கெடுத்துப் பொதுமக்கள் மிகவும் பாராட்டக்கூடிய இப்பணியில் கலந்துகொண்டனர்.

சீரணி அறிவகங்கள்

534 சீரணி அறிவகங்கள் தமிழ்நாடு முழுவதும் தொடங்கப்பெற்றன; முக்கிய நாளிதழ்களும் -- வார இதழ்களும் -- மற்றும் மாத இதழ்களும் வழங்கப்படுகின்றன.

இந்த அறிவகம், சீரணித் தொண்டர்களுக்குக் கல்வியறிவைப் புகட்டுவதுடன் -- மக்களின் ஆழ்ந்த அறியாமையை அகற்றவும், அரசின் பல்வேறு துறைகளில் முன்னேற்றங்களை விளக்கும் நிலையங்களாக விளங்குகின்றன.

பேருந்து நிலையங்களில் பயணிகளுக்கு உதவுகின்றனர்

சென்னை நகரில் நெரிசல் நிறைந்த நேரங்களில் பேருந்துப் பயணிகள் முறைப்படி ஒழுங்குடன் ஊர்தியில் வரிசையாக நின்று முறைப்படி ஏற உதவுகின்றனர்; 100 சீரணித் தொண்டர்கள் முக்கிய 50 பேருந்து நிலையங்களைத் தேர்ந்தெடுத்து அமர்த்தப்பட்டுள்ளனர்.

சீரணித் தொண்டர்கள் பாராட்டத் தகுந்த அளவில் இப்பணியில் பயணிகளை வரிசையாகச் செல்ல வைப்பதோடல்லாமல், ஒவ்வொருவராகவும் உரிய ஊர்தியினுள் ஏறிச் செல்ல உதவுகினறனர்.

பொதுமக்களும் -- செய்தித்தாள் துறையினரும் சீரணித் தொண்டர்களின் பணியைப் பெரிதும் பாராட்டியுள்ளனர்.

நகரசுத்தி வேலைக்கு பட்டதாரி மனு!

ஷிமோகா, ஜூலை 29--

இங்கு ஒரு பட்டதாரி, நகரசுத்தித் தொழிலாளர் வேலைக்கு மனுப் போட்டார்; ஆனால் அந்த வேலைகூட அவருக்குக் கிடைக்கவில்லை.

'தெருக்கூட்டும் தொழிலாளர் தேவை' என்று ஷிமோகா நகராட்சி விளம்பரம் செய்தது; சுமார் 300 பேர் மனுச் செய்தனர்; அவர்களில் பலர் பள்ளிப் படிப்பு முடித்தவர்கள்; 'மேல் வகுப்பைச் சேர்ந்தவர்' என்று கூறப்படும் அந்தப் பட்டதாரியும் மனுச் செய்தார்.

பேட்டியின்போது அவர், தமது கல்வித் தகுதிகளைத் தெரிவிக்கவில்லை; ஆனால், குறுக்குக் கேள்விகளைக் கேட்டு விசாரித்ததில் அவர் ஒரு பட்டதாரி என்று தெரியவந்தது.

அவருடைய மார்க்குகள் பதிவு செய்யப்பட்ட கார்டை அதிகாரிகள் பார்த்தனர்; அதன் பின், நகரசுத்தி வேலைக்கு அவரைத் தேர்ந்தெடுக்கவில்லை.

ஓ. வி. அழகேசனின் பண்பற்ற செயல்

அரசு கடைநிலை ஊழியர் சங்கம் கண்டனம்

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி ஊழியரிடையே குமுறல்

செங்கற்பட்டு, ஜூலை 26—

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த கடைநிலை ஊழியர் கூட்டம், 21—7—72 செங்கற்பட்டு என். ஜி. ஓ. சங்கத் தலைவர் எஸ். அரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, அனைத்துச் சங்கத் தலைவர்களும் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:—

செங்கை மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற மருத்துவக் கண்காட்சியையொட்டி 12—7—72 அன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கில் கலந்துகொள்ள வந்திருந்த முன்னாள் மத்திய அமைச்சரும் -- இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. ஓ வி. அளகேசன், கல்லூரி முதல்வரின் ஏவலரும் மற்றும் கார் ஓட்டுபவருமான திரு. கோவிந்தராசு என்பவரைக் காரோடு கார் உராய்ந்ததால் ஏற்பட்ட சம்பவம் காரணமாகப் பொறுமை இழந்து -- பண்பற்ற முறையில் -- அரசு ஊழியர் என்றும் கருதாமல் அடித்துத் தாக்கியதை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இது சம்பந்தமாக அரசு தக்க நடவடிக்கை எடுத்து அரசு ஊழியரின் தன்மானத்தைக் காப்பாற்றும் வகையில் நியாயம் வழங்கும்படி இக்கூட்டம் மிகவும் விரும்பிக் கேட்டுக்கொள்கின்றது

காவல் துறையினரிடம் கொடுக்கப்பட்டுள்ள புகாரை உடனடியாக விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுத்து, அரசு ஊழியர்களிடை ஏற்பட்டுள்ள கொந்தளிப்பைத் தவிர்த்து அமைதி நிலவ வழி செய்யுமாறு கேட்டுக்கொள்கிறது.

திரு. ஓ. வி. அளகேசன் அவர்களின் பண்பற்ற செயற்கையைக் கண்டிக்கும் வகையில் 1—8—72 அன்று செங்கை மருத்துவக் கல்லூரி ஊழியர்களும், மருத்துவமனை தொழிலாளர்கள் அனைவரும் கறுப்புச் சின்னம் அணிவதன் மூலம் தங்களின் மனக்கசப்பையும் வருத்தத்தையும் அறிவித்துக் கொள்வதென ஒருமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பாங்கிகள் பணக்காரர்களுக்கு மட்டுமல்ல--ஏழைகள் தொழில் நடத்தவும் உதவ வேண்டும்

அறிவு --- அனுபவத்தை நம்பிக் கடன் கொடுக்கலாம்

அரசுடைமை பாங்கிகளுக்கு ஆளுநர் ஷா யோசனை

சென்னை, ஜூலை 29—

" நாட்டுடைமையாக்கப்பட்ட பாங்கிகள், ஏழைகள் தொழில் நடத்தக் கடனுதவி செய்யவேண்டும் "

என்று ஆளுநர் கே. கே. ஷா, பாங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டு மூன்றாண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி நடைபெற்ற விழாவில் கேட்டுக்கொண்டார்; அவர் மேலும் கூறியதாவது :—

" பாங்கிகள் நாட்டுடைமையாக்கப்படுவதற்கு முன்பு திறமையாகச் செயல்படவில்லை என்று சொல்லமுடியாது; ஆனால் நாட்டுடைமையாக்கப்பட்ட பின், அவை செயல்படும் விதத்தில் குறிப்பாகக் கடன் வழங்குவதில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

பாங்கிகளில் முன்பு தெரிந்தவர்களுக்கும்-- பணக்காரர்களுக்கும் தான் கடன் கொடுக்கப்பட்டது; இப்போது ஏழைகளுக்குக் கடன் கொடுக்கப்பட்டு வருகிறது; 'பணக்காரர்கள்தான் பாங்கிகளில் கடன் வாங்கும் தகுதி படைத்தவர்கள்' என்ற நிலை மாறவேண்டும்.

கடும் உழைப்பு -- அறிவு -- அனுபவம் -- திறமை இவைகளையே கடன் வாங்க அளவுகோலாகக் கருதி -- பணம் இல்லாமல் இவை மட்டும் இருக்கும் ஏழைகளுக்கும் பாங்கிகள் கடனுதவி செய்ய வேண்டும்.

அறிவும் திறமையும் இருந்தும், தங்களுக்கு வாய்ப்புக் கிடைக்காததால் பல பட்டதாரி இளைஞர்கள் வாழ்க்கையில் வெறுப்படைந்து நக்சலைட்டுகளாக மாறி விடுகிறார்கள்; எனவே, இந்த நிலை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள இப்படிப்பட்ட பாங்கிகள் அவர்களுக்குத் தொழில் நடத்த உதவ வேண்டும்.

மக்களிடம் சேமிப்பு மனப்பான்மையை வளர்ப்பதிலும் பாங்கிகளுக்குப் பங்கு இருக்கிறது; ரூ. 500 சம்பளம் வாங்குபவர்களை, 'நீங்கள் சம்பளத்தில் ஒரு பகுதியைச் சேமியுங்கள்' என்று கூறினால், அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள்; 'விலைவாசி உயர்ந்துவிட்ட இந்தக் காலத்தில் எப்படிச் சேமிக்க முடியும்' என்று அவர்கள் தட்டிக் கழித்து விடுவார்கள்; ஆகவே, அவர்களைக் கவரும் விதத்தில் பல கவர்ச்சிகரமான திட்டங்களைப் பாங்கிகள் உருவாக்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக, 'மாதம் ரூ. 500 கட்டுங்கள்; நாங்கள் வீடு கொடுக்கிறோம்' என்று பாங்கிகள் கூறினால், 'சேமிக்க முடியுமா' என்று திகைப்பவர்கள் கூட—வீட்டு ஆசையால் சேமிக்கத் தொடங்குவார்கள்.

பெண்கள் அரசாங்க அலுவல்களில் வேலை பார்ப்பதைவிட, வீட்டில் இருந்தபடியே தொழில் செய்து வருவாயைப் பெருக்குவதற்குப் பாங்கிகள் கடன் வழங்கலாம்."

நிலச் சீர்திருத்தத்தில் மத்திய அரசின் 'அணுகுமுறை!

பிரச்சினையைத் தட்டிக்கழிப்பதாகக் கேரள அமைச்சர் குற்றச்சாட்டு

திருவனந்தபுரம், ஜூலை 28—

" பெரும் அளவில் பொருளாதார உதவியளிக்க மத்திய அரசு முன்வந்தாலன்றி, நிலச் சீர்திருத்தத்தின் உண்மையான நோக்கம் ஒருபோதும் முழு அளவில் நிறைவேற இயலாது "

என்று, கேரள வருவாய்த் துறை அமைச்சர் பேபி ஜான், நிருபர்களிடையே பேசுகையில் தெரிவித்தார்; இத்தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது :—

" துரதிருஷ்ட வசமாக இது சம்பந்தமாக மத்திய அரசு அணுகும் முறை, இப்பிரச்சினையைத் தட்டிக் கழிப்பதாகத் தோன்றுகிறது.

நிலவுடைமை உச்சவரம்புக்குப் பின் உபரி நிலங்களை வினியோகிப்பது மட்டும் நிலச் சீர்திருத்தமாகிவிடாது; கிராமப் பொருளாதார அமைப்பை நிலப் பிரபுத்துவத்திலிருந்து தொழில் அடிப்படைக்கு மாற்றுவதே உண்மையான நோக்கம்; இதற்குக் கணிசமான அளவு பணத்தை முதலீடு செய்ய வேண்டும்.

மத்திய அரசினால் நிதியுதவி அளிக்க முடியாவிட்டால், அதற்காக நிதி நிறுவனங்களை ஏற்பாடு செய்யலாம்; நஷ்ட ஈடு தருவதற்கும் -- இதர காரியங்களுக்கும் பணம் தேவை; இந்தப் பிரச்சினை சம்பந்தமாக மத்திய அரசின் நிலை திட்டவட்டமானதாக இல்லை."

விமான வேகத்தில் இரயிலும் செல்லும்

ஜப்பானின் சாதனை

டோக்கியோ, ஜூலை 29—

ஒரு விமானம் பறந்து செல்லும் வேகத்தில் ஜப்பானில் இரயிலும் இனிமேல் செல்லும்.

இந்த வேகத்தில் இரயில் செல்வதற்கு ஏற்றதாக ஒரு மோட்டாரை (எஞ்சினை) ஜப்பான் தேசிய இரயில்வேத் துறையினர் உருவாக்கியிருக்கின்றனர்.

இது வெற்றிகரமாகப் பரிசோதனை செய்து பார்க்கப்பட்டிருக்கிறது.

இரயில் பாதைக்கு 10 செண்டிமீட்டர் உயரத்தில் -- மணிக்கு 500 கிலோ மீட்டர் வேகத்தில் இது செல்லுமாம்.

அரசியலில் பலருக்கு வேலை இல்லை-- அதன் விளைவே கழகத்தைத் தாக்கும் முயற்சி

வெளிநாட்டவரும் பாராட்டும் கழக அரசைக் கவிழ்க்கக் கனவுகாணவேண்டாம்-எதிர்க்கட்சிகட்கு

அமைச்சர் இராமச்சந்திரன் எச்சரிக்கை

செங்கோட்டை, ஜூலை 29—

' மக்களிடம் நிரந்தரமான இடத்தைப் பெற்றிருக்கின்ற இயக்கம் தி. மு. கழகம்; இந்த இயக்கத்தை, 'குழப்பத்தை ஏற்படுத்தி -- வன்முறையைக் கையாண்டு அழித்துவிடலாம்; கழக அரசைக் கவிழ்த்துவிடலாம்' என்று நினைத்தால் அது வெறும் பகற்கனவாகவே முடியும் "

என்று, அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டார்.

செங்கோட்டை மலர்ச்சி அம்மன் கோவில் திடலில் நகர தி. மு. கழகக் கிளைச் சார்பில் திரு. செ. சுடலையாண்டி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் தம்பித்துரை, உத்தமன், அனிபா, அழகியநம்பி ஆகியோர் பேசினர்.

இறுதியில், அமைச்சர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

" தமிழகத்தில் நடக்கும் தி.மு.க. ஆட்சியைப் பற்றி நம் நாட்டில் மட்டுமல்ல -- அயல்நாட்டவரும் கூடப் பாராட்டுகிறார்கள்.

அரசியலிலிருந்து நாட்டு மக்களால் இருமுறை நடந்த தேர்தல்களின்மூலம் ஒதுக்கிவைக்கப்பட்டவர்கள் சிலர் சேர்ந்துகொண்டு, 'போராட்டம்' என்ற பெயரால் கையில் கிடைத்த கல்லாலும்--வாயில் வரக்கூடாத சொல்லாலும் கழகத்தைத் தாக்கி வருகின்றனர்; அவர்கட்கு வேலையில்லை; ஆகவே, அரசியலில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிவிட்டது.

நாம், பெரியாரின் வழித்தோன்றல் அண்ணா அவர்களின் வாரிசுகள்; அவர்களோ, 'காந்தியாரின் வாரிசுகள்' என்று தங்களைக் கூறிக்கொண்டு -- அவரது கொள்கையைப் பின்பற்றாமல் தவறான வழிகளில் நடைபோடுகிறார்கள்.

இன்றைக்குக் கழக ஆட்சிக்கு இருபக்கமும் எதிர்ப்பு; ஒரு பக்கம் -- பணக்காரர்கட்கு நம்மைப் பிடிக்கவில்லை; ஆகவே அவர்கள் எதிர்க்கிறார்கள்; மற்றொரு பக்கம் -- மத்தியில் ஆளும் கட்சியாக உள்ள இந்திரா காங்கிரசுக்கு நம்மைப் பிடிக்கவில்லை -- அவர்கள் எதிர்க்கிறார்கள்.

காமராசருக்கு நம்மை மட்டுமல்ல -- ஏழை எளிய மக்களையும் பிடிக்கவில்லை; அவர் -- பணக்கார விவசாயிகள் பக்கம் இருப்பவர் -- இராஜாக்களுக்காக இருப்பவர்; ஆகவே அவரும் எதிர்க்கிறார்!

" எப்படியாவது பதவியைப் பெற வேண்டும் " என்பதற்காக இவர்கள் எல்லாம் சேர்ந்துகொண்டு நம்மை எதிர்க்கிறார்கள்; 'ஏதாவது குழப்பத்தை ஏற்படுத்தியாவது ஆட்சியைக் கவிழ்க்க முடியாதா' என்று நினைக்கிறார்கள்!

இவர்கள் மக்கள் மன்றத்திற்கு வரத் தயாராக இல்லை; மக்கள் மன்றத்திற்கு மதிப்புக் கொடுக்கவும் தயாராக இல்லை; உண்மையிலேயே மக்கள் தீர்ப்புக்கு மதிப்புக் கொடுப்பவர்களாக இருந்தால், நாட்டில் குழப்பம் ஏற்பட இப்படி இவர்கள் கை கோர்த்துக் கொண்டு முயற்சி செய்வார்களா?"

முதல் இல்லாமலே லேவாதேவி செய்யும் நிறுவனங்கள்

பொதுமக்கள் பணத்தையே முதலீடாக ஆக்கும் வியாபாரக் கூட்டாளிகள்

பாங்கிகள் கமிஷன் நடத்திய ஆய்வில் வெளியான தகவல்

பம்பாய், ஜூலை 29—

" உயர்ந்த வட்டிகள் கொடுத்து பொது மக்களிடமிருந்து 'டிபாசிட்'டுகள் வாங்கும் நிதி நிறுவனங்கள் நாட்டில் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன; குறிப்பாக இவை தென் பகுதியில் மிகவும் அகமாக இருக்கின்றன"

என்று பாங்கிக் கமிஷன் தயாரித்துள்ள ஒரு ஆய்வுரையில் சுட்டிக் காட்டப்பட்டு -- இந்தப் போக்கு பற்றி கவலை தெரிவிக்கப்பட்டிருக்கிறது; அது மேலும் கூறியிருப்பதாவது : —

" பணம் டிபாசிட் செய்கிறவர்களுக்குச் சில கம்பெனிகள் மிகவும் உயர்ந்த வட்டி விகிதங்கள் அளிக்க முன்வருகின்றன; சில கூட்டாளிகள் சேர்ந்துகொண்டு முதலீடு செய்து இந்த கம்பெனிகளைத் தொடங்குகிறார்கள்; ஆனால், சில சமயங்களில் கம்பெனி தொடங்கப்பட்ட சிறிது காலத்துக்குள்ளாகவே அதன் கூட்டாளிகள், தாங்கள்போட்ட பணத்தை திரும்ப எடுத்துக் கொண்டு விடுகிறார்கள்,

லேவாதேவிக்காரர்களுக்கும் (வட்டிக்கடைக்காரர்களுக்கும்)-- இந்த நிதி கம்பெனிகளுக்கும் ஒரே ஒரு வித்தியாசம்தான் இருக்கிறது; லேவாதேவி தொழில் செய்பவர்கள் தம் சொந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அதைச் செய்கிறார்கள்; ஆனால், இந்த நிதி கம்பெனிகள், டிபாசிட் செய்யும் பொது மக்களின் பணத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகின்றன.

டிபாசிட் செய்பவர்களின் நலன்களை முன்னிட்டும் -- கடன் வாங்குபவர்களின் வட்டிச் சுமையைக் குறைப்பதற்காகவும் இத்தகைய கம்பெனிகள் பெருகுவதற்கு ஊக்கமளிக்காமல் தடுப்பது நல்லது."

பற்றுக்குறை 'பட்ஜெட்'டே விலையேற்றத்துக்குக் காரணம்

பண்டங்கள் பற்றுக்குறை என்பதில்லை

அரசுத் துறை வட்டாரங்கள் தரும் தகவல்

புதுடில்லி, ஜூலை 29—

தற்போது காணப்படும் விலைவாசி ஏறுமுகப் போக்குக் குறித்து அரசு வட்டாரங்கள் கவலை கொண்டிருக்கின்றன; ஆனால் உணவுத் தானியங்கள் பிரச்சினையிலோ அல்லது அடிப்படையான பரிவுப் பண்டங்கள் பிரச்சினையிலோ பற்றுக்குறை இல்லை என்பதை அவை சுட்டிக் காட்டுகின்றன; சிற்சில திங்களில் ஏற்படக்கூடிய தட்டுப்பாடுகள் -- விலை உயர்வு போன்ற நிர்ப்பந்தங்கள் அடுத்துவரும் வாரங்களில் தணிந்துவிடுமென்று அவை எதிர்பார்க்கின்றன.

1971—72-ஆம் ஆண்டில் முன்பின் கண்டிராத அளவுக்குப் பற்றுக்குறை வரவு -- செலவுத் திட்ட முறை கையாளப்பட்டிருப்பதும் இந்த விலை ஏறுமுகப் போக்கிற்கான காரணங்களில் ஒன்று என்று கருதப்படுகிறது.

சென்ற ஆண்டில் மொத்தம் எந்த அளவுக்குப் பற்றுக்குறை வரவு -- செலவுத் திட்ட முறை கையாளப்பட்டிருக்கிறது -- (அதாவது, வரவு -- செலவில் தண்டுள்ளும் தொகை ஈடு செய்யாமல் விடப்பட்டிருக்கிறது) -- என்பதுபற்றிய புள்ளி விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை.

சென்ற ஆண்டு ஜூலை நிலவரத்துடன் ஒப்பிடுகையில், இந்தத் திங்கள் தொடக்கத்தில் மொத்த விலை குறியீட்டெண் 6.3 சதவிகிதம் அதிகமாகியிருக்கிறது; இந்தத் திங்கள் தொடக்கத்தில் எல்லாப் பண்டங்களுக்கும் 198-ஆக இருந்த குறியீட்டெண், அதற்குப்பிறகு 200-க்குமேல் உயர்ந்திருப்பதாக அதிகாரபூர்வமற்ற தகவல்கள் கூறுகின்றன.

உணவுப் பண்டங்களின் விலையில்தான் அதிக உயர்வு காணப்படுகிறது.

கல்விக்கு ரூ. 320 கோடி

பூனா, ஜூலை 29—

" ஐந்தாவது திட்டத்தில் கல்விக்கு ரூ. 3,200 கோடி ஒதுக்கப்படும் என எதிர்பார்த்து -- அதற்கேற்ற திட்டங்கள் வகுக்கப்படுகின்றன "

என்று, மத்திய கல்வியமைச்சர் நூருல் ஹாசன் நாடாளுமன்ற ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

கழக அரசைக் கவிழ்க்கத் தூண்டிய பி.சி. சேத்தியின் ஆட்சியில் ஊழல் -- ஒழுங்கீனம்!

புதிய தொழில்களுக்கு உரிமம் கிடைத்தும் பயன்படுத்தவில்லை

ஒதுக்கிய மூலப் பொருள்களில் மோசடி -- துஷ்பிரயோகம்

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் பகிரங்கக் குற்றச்சாட்டு

போபால், ஜூலை 27--

" பி. சி. சேத்தி மாநில முதலமைச்சராக உள்ள மத்தியப் பிரதேச மாநிலத்தில் தொழில் துறை வெகுவாகப் பின்தங்கியுள்ளது; தொழில் துறை அமைச்சகத்திலும் -- வாரியத்திலும் இலஞ்ச ஊழல் மிகுந்திருக்கிறது "

என்று சட்டமன்ற கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் ஹோமி தாஜி, பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

" மத்தியப் பிரதேச மாநிலத் வளர்ச்சி வாரியம் பல தொழில்களைத் தொடங்க மத்திய அரசிடம் உரிமங்கள் கேட்டிருந்தது; மத்திய அரசு 11 புதிய தொழில்களுக்கான உரிமங்களை வழங்கியுள்ளது; இவைகளில் ஒன்றுகூட இதுவரையிலும் பயன்படுத்தப்படவில்லை; ஒரு புதிய தொழிற்சாலைகூட ஏற்படுத்தப்படவில்லை.

" மாநிலத் தொழில் துறையில் இலஞ்ச ஊழல் மண்டிக் கிடக்கிறது ஒதுக்கப்படும் மூலப் பொருள்களில் மோசடி நடத்தப்படுகிறது; இந்த மூலப் பொருள்கள் உண்மையிலேயே பயன்படுத்தப்படுகின்றனவா என்பது குறித்து விசாரணை நடத்தப்படவேண்டும்."

பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் 1,596 தீவிரவாதிகள் கைது

மேற்கு வங்க அமைச்சர் தரும் தகவல்

கல்கத்தா, ஜூலை 29—

" மேற்கு வங்கத்தில் உள்நாட்டும் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இதுவரையில் 1,596 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் "

என்று வங்கப் போலீசுத் துணையமைச்சர் டாக்டர் பஸ்சில் ஹக் தெரிவித்தார்.

" இந்தச் சட்டத்தின்கீழ் மொத்தம் 3,207 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; இவர்களில் தீவிரவாதிகள் 1,596 பேர்களாகும் "

என்றும் அவர் சட்டமன்றத்தில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

‘எதிர் நீச்சலில் வளர்ந்தது தி.மு.க.’

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தி. மு. கழகத்தின் கிளைகள் எங்கெங்கே இருக்கின்றனவோ -- அவைகளெல்லாம் வாழ்த்துகின்றன! தி.மு. கழகத் தொண்டர்கள் எங்கெங்கே இருக்கின்றார்களோ --- அவர்களெல்லாம் வாழ்த்துகிறார்கள் !"

பொதுச்செயலாளர் டாக்டர் நாவலர்

கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"பேரறிஞர் அண்ணா அவர்கள், நாட்டு மக்களின் உள்ளத்தில் கருத்துக்களைப் பதியச் செய்ய கலை உணர்வுடன் முற்பட்டார்; இலக்கியம் -- இசை எதன் மூலமாக என்றாலும் -- அதன் மூலம் அரசியல் உணர்வுகளை ஏற்றி வைக்கக் கலைத் துறையை அண்ணா பயன்படுத்தினார்; அவர் வழியில் கலைஞர் அவர்களும் கலைத் துறையோடு நெருங்கிய ஈடுபாடு கொண்டு கருத்துக்களை கலை உணர்வோடு சொல்லி வருகிறார்.

அதே வகையில் புரட்சி நடிகர் அவர்களும், கலை உணர்வோடு மக்கள் நெஞ்சில் பதியச் செய்வதால்தான், இன்று கழகத்தை எவரும் ஆட்ட முடியாத அளவுக்கு -- அசைக்க முடியாத அளவுக்கு வளர்ந்திருக்கிறது !

கழகத் தலைவர்களை ‘கூத்தாடிகள்’ என்றும் -- ‘சினிமாக் கட்சிக்காரர்கள்’ என்றும் எள்ளி நகையாடிய நேரத்தில்கூட, கலை உள்ளத்தோடு கழகத்தை வளர்க்க முற்பட்டதால்தான் இன்று கழகம் இவ்வளவு பெருமைக்கு உயர்ந்திருக்கிறது !

கம்யூனிஸ்டுகளின் சித்தாந்தங்களை எடுத்துக் கொண்டால் அவர்களது அரசியல் அறிவியல் ஆகட்டும் -- அரசியல் தத்துவ இயல் ஆகட்டும் -- அவை மக்களின் உள்ளத்தில் எளிமையாக ஏறுகிறவை அல்ல !

ஆயிரக்கணக்கான பக்கங்களில் அவர்கள் புத்தகம் போட்டு எட்டணாவுக்குத் தந்தும்கூட அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ள மக்களால் முடியாமற் போய்விட்டது ! சிந்திப்பவர்களுக்கும் அவைகள் புளிப்பெடுத்துப் போய்விட்டன !

ஆனால், கலை உணர்வுகளோடு கழகம் மக்களை அணுகியதால்தான், எளிய முறையில மக்கள் கருத்துக்களைப் புரிந்துகொண்டு கழகத்துக்கு ஆக்கம் காட்டி -- கழகத்தை இன்று ஓங்கு புகழ் அடையச் செய்திருக்கிறார்கள் !

அந்த வகையில், புரட்சி நடிகர் தற்போது புதிய நாடகங்களிலும் நடித்து மக்களிடம் கருத்துக்களைப் பரப்பப் போவதாக அண்மையில் கூறியிருக்கிறார்.

தேர்தல் காலத்தில் கலைஞர் அவர்கள் எழுதிய ‘நானே அறிவாளி’ -- ‘உதய சூரியன்’ போன்ற நாடகங்கள் உருவாக்கிய பிரச்சாரங்கள் பற்றி நாடறியும்.

நாடகங்களில் காட்சிக் கட்டுப்பாடுகள் தோன்றலாம் -- ஆனால் கருத்துக்களுக்குக் கட்டுப்பாடு வராது !

குறிப்பாக, நாடகம் பார்த்து மனம் மாறிக் கழகத்தின்பால் ஈர்க்கப்பட்டவர்கள் ஏராளம் !

கலைத்துறை மூலமாகக் கருத்துக்களுக்கு வலுவூட்டி -- கொள்கைகளைப் பரப்பிய புரட்சி நடிகர் அவர்களை இங்கே நாம் பாராட்டுகிறோம் என்றால், ‘கழகமே பாராட்டுகிறது’ என்று பொருள்.

அந்த வகையில் அவரைப் பாராட்டிக் கழகம் பெருமை பெறுகின்ற அளவுக்குப் புரட்சி நடிகர் பல்வேறு தொண்டுகளை ஆற்றுவார் என்று வாழ்த்துகிறேன்."

இறந்தாலும் இலட்சியத்துடன் - கொள்கையுடன் இறப்போம்

எம்.ஜி.ஆர். கனிவுரை

பாராட்டுக்கு நன்றி தெரிவித்துப் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"கலைஞர் அவர்களுக்கும் -- எனக்கும் உள்ள தொடர்பினைப் பற்றி இங்கே கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்; ‘முரட்டுக் குதிரைப் போட்டுக் கொண்டு கலைஞர் அவர்களை என் பக்கம் இழுக்க முயன்றேன்’ என்றெல்லாம் சொன்னார்கள்; ஆனால் அதில் நான் அடைந்த தோல்வியை மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்கிறேன்.

நான் முதன்முதலாகப் பெற்ற பட்டம், ‘புரட்சி நடிகர்’ என்ற பட்டமாகும்; அந்தப் பட்டத்தை எனக்கு முதன்முதலாகத் தந்து பாராட்டியவர் இன்று கழகத் தலைவராகவும் -- தமிழக முதல்வராகவும் இருக்கும் கலைஞர் அவர்கள்தான்.

அன்றே எனக்குப் பட்டம் தரும் அளவுக்குத் தகுதி படைத்திருந்த அவரிடம், நான் என தோல்வியை ஒப்புக்கொள்வதில்மகிழ்ச்சியே அடைகிறேன்.

இன்று கலைஞர் அவர்களை எந்த மாநிலத்திலிருந்து வந்தவர்களாக இருந்தாலும் சந்தித்துப் பேச விரும்புகிறார்கள்; இந்த நாட்டில் மட்டும் என்றில்லை -- நான் சிங்கப்பூர் சென்றிருந்தபோதும், பினாங்குக்குச் சென்றிருந்தபோதும அங்குள்ள அமைச்சர்களும் -- மக்களும முதல்வர் கலைஞர் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசத் தவறவில்லை; அந்த அளவுக்குக் கலைஞர் அவர்களை வெளிநாட்டினர்கூட பெருமையோடு நினைக்கிறார்கள்.

தமிழ்நாட்டு மக்கள் மட்டுமன்று -- கடல் கடந்துள்ள மக்களும் கலைஞர் அவர்கள்மீது அதிக அன்பு வைத்துள்ளனர் என்பதை, அண்மையில் நான் வெளிநாடு சென்றபோது அறிந்தேன்.

எனக்கு, ‘புரட்சி நடிகர்’ என்ற பட்டம் அளித்தபோதே கலைஞர் அவர்களைப் பற்றி நான் சொன்னது, ‘திருவாரூர் மு. கருணாநிதி’ என்ற சொற்களை -- ‘தி. மு. க.’ என்று விளக்கிக் கூறி, ‘திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் அவருக்கும் தொடர்பு உண்டு’ என்று சொன்னேன்.

இன்று, ‘டாக்டர் கலைஞர் அவர்களே’ என்று குறிப்பிடுகிறேன் என்றால், ஏற்பட்டிருக்கின்ற பெரிய மாற்றத்தை --சிறப்பான வளர்ச்சியைப் பார்க்க வேண்டும்.

நாடகங்கள் மூலம் அன்றாடம் எழும் கேள்விகட்கும் பதில் சொல்ல முனைவேன்

எனக்குக் குரல் ஒத்துழைக்காத காரணத்தால் இதுவரையில் கழகத்துக்காக நாடகங்கள் நடத்திப் பிரச்சாரம் செய்ய முடியாமல் பொறுத்துக்கொண்டிருந்தேன்.

அண்மையில் நான், சிங்கப்பூர் சென்றிருந்தபோது, அங்கு நடைபெற்ற கலை விழாவில் நடிக்க வேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க -- 15 நிமிடம் நாடகம் நடித்தபோது, ‘இனிமேல் நாம் நாடகங்கள் நடிக்கலாம்’ என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

திரைப் படத்தில் நமது கொள்கைகளைப் பற்றிச் சொன்னால் வெட்டிவிடுவார்கள்; ஆனால் நாடகங்கள் மூலம் அன்றாடம் எழுகின்ற கேள்விகளுக்கு அன்றாடம் பதில் சொல்லி -- நம் கொள்கை வழியில் தொண்டு செய்ய முடியும்; ‘மாற்றுக் கட்சியினருக்குப் பதில் அளிக்கும் வகையில் நாடகங்கள் அமையும்’ என்றும் கூறிக்கொள்கிறேன்.

கல்லக்குடிப் போராட்டத்தில் தன் உயிரையே பணயமாக வைத்தவர் கலைஞர் அவர்கள், அன்று உயிரையும் பணயமாக வைத்துப் போராடிய கலைஞர்தான் இன்று கழகத்தின் தலைவர் !

இறந்தாலும், இலட்சியத்தோடு -- கொள்கையோடுதான் நாம் இறக்கப்போகிறோம்; மிகப் பெரிய பொறுப்பு நம்மிடம் இருக்கிறது; கழகத்தை வளர்ப்பதற்காக என்றென்றும் பாடுபடுவோம்."

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible]

மக்களவை --- மாநிலங்களவை தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம்

செய்தியாளர்களிடம் கழகத் தலைவர் கலைஞர் விளக்கம்

சென்னை, ஜூலை 29--

நாடாளுமன்ற மக்களவை--மாநிலங்களவை தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம் நேற்று காலை 10-30 மணியளவில் அண்ணா சாலை அரசினர் தோட்டத்திலுள்ள கழகச் சட்டமன்றக் கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்குக் கழகத் தலைவர் கலைஞர் தலைமை வகித்தார்; பொதுச்செயலாளர் நாவலர், துணைப் பொதுச்செயலாளர்கள் என். வி. நடராசன், க. இராசாராம் மற்றும் அமைச்சர்கள் சத்தியவாணிமுத்து, எஸ். ஜே. சாதிக் பாட்சா, மன்னை ப. நாராயணசாமி, மு. கண்ணப்பன் ஆகியோரும், மக்களவை -- மாநிலங்களவை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

மக்களவை தி. மு. க. குழுத் தலைவர் நாஞ்சில் கி. மனோகரன் டில்லியில் இருப்பதால், தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு துணைப் பொதுச்செயலாளர்களுடன் பேசினார்.

நிர்வாகிகள் தேர்வு

இந்தக் கூட்டத்தில், மக்களவை தி. மு. க. குழுவிற்கும் -- மாநிலங்களவை தி. மு. க. குழுவிற்கும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கூட்டம் முடிந்தபிறகு கழகத் தலைவர் கலைஞர் அவர்களைச் செய்தியாளர்கள சந்தித்தபோது, கூட்டத்தில் செய்யப்பட்ட முடிவுகள் -- பேசப்பட்ட பிரச்சினைகள குறித்து குறிப்பிட்டதாவது :—

"மக்களவை — மாநிலங்களவை ஆகிய இரு அவைகளின் தி. மு. கழகக் கட்சித் தலைவராகத் திரு. இரா. செழியன் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்; அவரது தலைமையின்கீழ் இரு அவைகளின் தி. மு. கழகக் குழுவும் இயங்கும்.

மக்களவை தி. மு. க. குழுத் தலைவராக நாஞ்சில் கி. மனோகரன் -- துணைத் தலைவராக கோ. விசுவநாதன்—செயலாளராக மாயவன்—துணைச் செயலாளர்களாக பி. ஏ. சாமிநாதன், த. கிருட்டினன்—கொறடாவாக சி. டி. தண்டபாணி—பொருளாளராக சிட்டிபாபு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

மாநிலங்களவை தி. மு. க. குழுத் தலைவராக தில்லை வில்லாளன்—துணைத் தலைவராக டி. கே. சீனிவாசன—செயலாளராக கே. ஏ. கிருட்டினசாமி—கொறடாவாக எஸ். எஸ். மாரிசாமி ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இரு அவைகளின் தலைவரான இரா. செழியன் அவர்கள், நாடாளுமன்ற இரு அவைகளின் தி.மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தைக் கூட்டுவது -- தலைமைக் கழகத்துடன் அவ்வப்போது தொடர்பு கொண்டு கொள்கை ரீதியில முடிவுகள் எடுப்பது -- குழுக்கள் அமைப்பதுபற்றிக் கட்சிக் கூட்டங்களைக் கூட்டி கலந்து பேசி அறிவிப்பது ஆகிய பணிகளைச் செய்வார்.

டெல்லியிலுள்ள தி. மு. கழகக் கட்சி அலுவலகம், இரா. செழியன் பொறுப்பில் இயங்கும்; இரு அவைகளின் தி. மு. கழகக் குழு நிர்வாகிகளும் அவரது தலைமையில் இயங்குவார்கள்.

சிம்லா உடன்பாடு -தி.மு. கழக நிலை

பின்னர், செய்தியாளர் கேட்ட கேள்விகளும் -- முதலமைச்சர் அளித்த பதில்களும வருமாறு :—

கேள்வி :—"சிம்லா ஒப்பந்தம் பற்றி விவாதிக்கப்பட்டதா ?"

கலைஞர் :—"சிம்லா உடன்பாடு பற்றி விவாதித்தோம்; ‘அந்நியர் தலையீடின்றிப் போராட்டம எதுவுமில்லாமல பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும்’ என்ற அடிப்படையில் ஏற்பட்டுள்ள சிம்லா உடன்பாட்டை முன்பே வரவேற்றிருக்கிறோம்; இந்த உடன்பாட்டின் பிரிவுகளைப் பற்றி நாடாளுமன்றக் கூட்டத்தில விவாதிக்கப்படும்போது அவைகளின் சாதக பாதகங்களை உணர்ந்து -- நாடாளுமன்றத் தி. மு. கழகம் தனது கருத்துக்களை எடுத்துச் சொல்லும; இதற்கான வழிமுறைகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன."

கேள்வி :—"சிம்லா உடன்பாடு தொடர்பாக நாடாளுமன்றத்தில ஜனசங்கக் கட்சி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் போவதாக கூறப்படுகிறதே -- அப்படிக் கண்டனத் தீர்மானம் கொண்டுவந்தால் தி. மு. கழகத்தின் நிலை என்ன?"

கலைஞர் :—"எந்த நிலையில் வருகிறது என்று அதன் அடிப்படையை ஆராய்ந்து கழகம் முடிவு எடுக்கும; ஆனால், சுதந்தர நாள வெள்ளி விழாக் கொண்டாடப்படும் நேரத்தில், ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம வர வேண்டுமா என்பதை தி. மு. கழகம் சிந்திக்காமல் இல்லை."

பிரச்சினைகளின் அடிப்படையில் ஆய்வு

கேள்வி :—"பொதுவாக இந்திரா அரசுடன் எப்படி நடந்து கொள்வது என்ற விதிமுறைகள் கொடுக்கப்பட்டனவா? இதற்கு முன்பு இந்திரா காங்கிரசுக்கும்-- கழகத்திற்கும் தோழமை உறவு இருந்தது; இப்போது அந்த நிலை மாறியிருக்கிறதே!"

கலைஞர் :—"நாங்கள் பிரச்சினைகளைத்தான் பார்ப்போமே தவிர, கட்சிகளையோ -- தனிப்பட்டவர்களையோ அடிப்படையாக வைத்து எங்கள் கருத்துக்களைச் சொல்லும் வழக்கம் எப்போதும் இல்லை."

நக்சல்பாரி தலைவர் சாரு மசும்தார் உடல் தகனம்

கல்கத்தா, ஜூலை 28—

பல ஆண்டுகளாகப் போலீசாரால் தேடப்பட்டுக் கைது செய்யப்பட்ட நக்சல்பாரித் தலைவர் சாரு மசும்தார் திடீரென்று மரணமடைந்தார்.

அவர் கல்கத்தாவிலுள்ள ஒரு சிறையில் காவலில் வைக்கப்பட்டிருந்தார்; அவருக்கு இதயக் கோளாறு ஏற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

"எவ்விதச் சிகிச்சை அளித்தும் பயனில்லாது போகவே அவர் மரணமடைந்தார்" என்று மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அவருக்கு மனைவியும் -- ஒரு மகனும் -- இரு மகளும உள்ளனர்.

அவரது உடல் நேற்றிரவு சகநகர் இடுகாட்டில் எரிக்கப்பட்டது; இறுதிச் சடங்கின்போது அவரது மனைவி லீலாவும், மகள் அநிதாவும் இருந்தனர்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

31--7--72

திருச்செங்கோடு

நகர தி.மு.க. சார்பில் மாலை 6.30 மணிக்கு 40-கால் மண்டபம் எதிரில்; தலைவர்: செ. கந்தப்பன் எம்.எல்.ஏ; பேசுவோர்: முதலமைச்சர் கலைஞர், அமைச்சர் க. இராசாராம், மா. முத்துசாமி எம்.பி., ஈ.ஆர். கிருஷ்ணன் எம்.பி., எஸ். ஆறுமுகம எம்.எல்.ஏ., என்.ஏ. நடேசன், மற்றும் பலர்.

திருச்செங்கோட்டில் முதலமைச்சர் கலைஞர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்

ஜூலை 31: மாலை 4 மணி: கொமாரபாளையம்—மகப்பேறு விடுதித் திறப்பு விழா; 4-30 மணி: கொமாரபாளையம திருமண மன்ற அடிக்கல் நாட்டுவிழா; 5 மணி: கொமாரபாளையம் கண் சிகிச்சை முகாமில உரையாற்றுதல; 6-30 மணி: திருச்செங்கோடு நகரில் நாற்பது கால மண்டபத்தின் முன்னிலையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்.

விருத்தாசலம் கண் சிகிச்சை முகாம் நிறைவு விழாவில் பேராசிரியர் பங்கேற்பு

விருத்தாசலத்தில் முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவசக் கண் சிகிச்சை முகாம நிறைவு விழா 30—7—72 காலை 10-மணிக்கு கொளஞ்சியப்பர் திருக்கோயில் கலையரங்கில் திரு. எம். செல்வராசு தலைமையில் நடைபெறும்; மக்கள நலவாழ்வுத்துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் அறுவைச் சிகிச்சை பெற்றவர்கட்குக் கண்ணாடிகள் வழங்கிச் சிறப்புரையாற்றுவார்; திரு. ஏ. வெங்கடாசலம், டாக்டர் ஜே. ஈ. ஆபிரகாம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

புதிய உள்நாட்டு அஞ்சல் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

-- கல்கத்தா -- டெல்லி ஆகிய நகரங்களில் மட்டும் புதிய கவர்கள் விற்பனை செய்யப்படும்; பிறகு எல்லா ஊர்களிலும் விற்கப்படும்.

பழைய கவர்களும் புழக்கத்தில் இருக்கும்.